சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 26.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | ஹரிஷ் |
| தந்தை பெயர் | : | மணிவண்ணன் |
| கிராமம் | : | கட்டையன்காடு |
| தாலுக்கா | : | பட்டுக்கோட்டை |
| தொழில் | : | அவசர சிகிச்சை மருத்துவர் |
| வயது | : | 29 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2025 ஆம் தேதி இரவு 8.48 மணிக்கு எண்கண் கிராமம், வீரையன் மகன் அ.சா-1 அன்புச்செல்வன் என்பவரை அவரது தாயார் சித்திரா என்பவர் அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அடையாளம் தெரியாத 1 நபர் 02.11.2025 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் முகந்தனூர் ஆர்ச் அருகில் தன்னை கண்ணாடி பாட்டிலில் கொண்டு தாக்கியதாக கூறினார். அவருக்கு இடது பக்க கண் புருவத்தின் மேல் 1.5 x 0.4 செ.மீ அளவில் கிழிந்த காயமும், இடது பக்க தலையின் முன்பகுதியில் இரத்த கட்டு மற்றும் தலையின் நடுப்பகுதியில் இரத்த கட்டும், வீக்க காயமும், மூக்கின் முன் பகுதியில் 1.5 x 0.4 செ.மீ அளவில் கிழிந்த காயமும் காயப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் எந்த தேதியில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் கடந்த 02.11.2025 ஆம் தேதி விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்ததாக சொல்லும் போலீசார் பெயர், பதவி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னை விசாரணை செய்த போலீசார் அ.சா-1க்கு ஏற்பட்டதாக சொல்லும் காயத்திற்கு கண்ணாடி பாட்டில்களை காட்டி என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஒருவர் வயலில் வேலை செய்யும் போது முள் கம்பி

வேளியில் மீது நிலை தடுமாறி விழுந்தாலும் நான் முதல் விசாரணையில் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம் செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.26 18:19:00 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.